முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1499

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.11.2023**, திங்கட்கிழமை

1. பரம ஆனந்த ஞான குருவே
பரப்பிரம்ம சூட்சுமம் கண்ட குருவே
வரம்பல தந்து ஆறுமுகன் யான்
வள்ளலாக உன்னுள் வாழ்ந்துவர
2. வருகின்ற அரங்க ஞானி உந்தனுக்கு
வல்லமைபட சுப்ரமணியர் யானும்
தருகின்றேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 20 ம் நாள், 06.11.2023, திங்கட்கிழமை)
தர்மவான் உன்னால் மட்டுமே இந்த கலியுகத்தில்
3. கலியுகத்தில் தக்கபடி ஞான லோகமாற்றம்
தவபலமாய் செய்து முடிக்க நேரும்
அழியாமை தந்து உன்வழி வரும் மக்கள் மூலம்
அகிலத்துக்கு ஒரு மாற்றம் தர நேரும்
4. நேர்மைகொண்டு உன்வழி உலகமக்கள்
நீதிபயின்று தர்மம் வளர்த்து
வருங்காலம் அரங்கன் உன்னால் அனைத்தும் சித்தியாகும் என
வைரம்போல் உறுதிகொண்டு சரணாகதி மிகுந்து
5. மிகுந்து ஞானம் பயின்று வந்தால்
மேலான மாற்றம் அரங்கன் உன்னால் நடக்கும்
தகுந்தபடி உலகமெங்கும் ஞானவான்கள் தலைமை
தக்கபடி நன்மக்கள் மூலம் தேர்வுகண்டு
6. கண்டுமே உலகம் ஞான ஆட்சி
கலியிடரை வெல்லும் தர்ம ஆட்சி
தொண்டர்களாம் அரங்கன் ஞானப்படைகள் மூலம்
தேசமெங்கிலும் அற்புதமாக உருவாக நேரும்

7. நேர்மைபட உலகோர்க்கு ஞானசித்தி
நிலவுலகில் அரங்கன் உன்னால் நிகழக்கூடும்
வறுமைவென்று உலகமக்களெல்லாம்
வளமாக வையகத்தில் அரங்கன் உன்வழி ஞானிகளாக மாற்றம் பெறுவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–